# 4 நற்செய்தி

## மாற்கு நற்செய்தி




ஆசிரியர் : தூய மாற்கு

அடையாளம் : சிங்கம்

திருமுழுக்கு யோவான் பாலைவனத்தில் ஆற்றிய போதனையுடன் தூய மாற்கு நற்செய்தியை ஆரம்பிக்கின்றார். திருமுழுக்கு யோவானின் போதனை சிங்கம் கர்ச்சிப்பது போலாகும். எனவே சிங்கம் இந் நற்செய்திக்கு அடையாளமாக வழங்கப்பட்டுள்ளது.

காலம் : கிபி 64- 66

இடம் : உரோமை நகர்

வேறு பெயர் : பாடுகளின் நற்செய்தி

நோக்கம் : நீரோ மன்னனின் துன்புறுத்தலுக்கு உள்ளான கிறிஸ்தவர்களை ஊக்கப்படுத்தல்.

தூய மாற்கு தூய பேதுருவின் மொழிபெயர்ப்பாளராவார். நீரோ மன்னனின் துன்புறுத்தலுக்கு உள்ளான கிறிஸ்தவர்களுக்கு பாடுகளின் வழியாகத்தான் உயிர்ப்பின் மகிழ்வில் பங்குகொள்ள முடியும் என்பதை வலியுறுத்துகிறார். கிறிஸ்தவராகிய எமது வழி சிலுவை வழி என்பதை அவர் எமக்கும் எடுத்துரைக்கின்றார்.

இன்று நம்பிக்கைக்கு எதிராக பல்வேறு சக்திகள் செயல்படுவதை நாம் அறிவோம் கிறிஸ்தவர்கள் தூற்றுதல்களுக்கும் பழிச்சொற்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். மேலும் சில நாடுகளில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்படுகின்றார்கள். நீரோ மன்னனின் துன்புறுத்தலில் உயிர் கொடுத்த கிறிஸ்தவர்களின் வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொண்டு நம்பிக்கையுடன் வாழ்வது எமது கடமையாகும்.

## மத்தேயு நற்செய்தி




ஆசிரியர் : திருத்தூதரான தூய மத்தேயு

அடையாளம் : மனித முகம்

இயேசுவின் தலைமுறை அட்டவணையுடன் இந்நற்செய்தி ஆரம்பிக்கப்படுவதால் இவ் அடையாளம் வழங்கப்பட்டுள்ளது.

காலம் : கி.பி 80-90

இடம் : சிரியா பலஸ்தீனா

வேறுபெயர் : இறையாட்சியின் நற்செய்தி

நோக்கம் : இயேசுவை புதிய மோசேயாகவும் மெசியாவாகவும் காட்டுவது

திருத்தூதரான தூய மத்தேயுவின் தந்தை அல்பேயு ஆவார். மத்தேயு இயேசுவால் அழைக்கப்படுவதற்கு முன் வரிதண்டுபவராக காணப்பட்டார். இவர் யூதக் கிறிஸ்தவர்களுக்கு நற்செய்தியை எழுதினார். யூதர்கள் எதிர்பார்த்த மெசியா இயேசு கிறிஸ்து ஆவார் என்பதை வலியுறுத்திக் கூறுகிறார்.

பழைய ஏற்பாட்டில் மோசேயைப் போல் புதிய ஏற்பாட்டில் இயேசு சட்டங்களைக் கொடுத்ததாகக் காட்டுகிறார். நாமும் இறையாட்சி மதிப்பீடுகளை அறிந்து அன்பு, மன்னிப்பு நீதி நிறைந்த சமூகத்தை உருவாக்க முன்வருவோம்.

## லூக்கா நற்செய்தி

ஆசிரியர் : தூய லூக்கா




அடையாளம் : எருது

குருவாகிய செக்கரியா பலி ஒப்புக் கொடுக்கும் சம்பவத்துடன் லூக்கா நற்செய்தி ஆரம்பிக்கப்படுகின்றது. அக்காலத்தில் எருது பலிப் பொருளாகும். அதனால் இந்த அடையாளம் வழங்கப்படுகின்றது.

காலம் : கி.பி 80 - 85

இடம் : சிரியா அந்தியோக்கியா

வேறு பெயர்கள் :

- ஏழைகளின் நற்செய்தி
- புற இனத்தவரின் நற்செய்தி
- அன்பின் நற்செய்தி
- செபத்தின் நற்செய்தி
- பெண்களின் நற்செய்தி

நோக்கம் : கிறிஸ்து இயேசு யூதர்களுக்கு மட்டுமல்ல உலகிற்கெல்லாம் மீட்பர் என எடுத்துக்காட்டுவது.

கிறிஸ்து இயேசு உலகிற்கெல்லாம் மீட்பர் எனக்காட்ட புற இனத்தவரான வரலாற்று ஆசிரியர் முயற்சி செய்கிறார். இவர் ஒரு வைத்தியரும் ஓவியக் கலைஞரும் ஆவார். இவர் தமது நற்செய்தியில் பெண்கள், ஏழைகள், மீனவர்கள், சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் மீது கிறிஸ்து கொண்டிருந்த அன்பை எடுத்துக்காட்டினார். மேலும் நற்செய்திக்கு புறம்பாக திருத்தூதர் பணி நூலையும் இவர் எழுதியுள்ளார். திருத்தூதர் பணிநூல் லூக்கா நற்செய்தி நூலின் இரண்டாம் பாகமாக கருதப்படுகின்றுது.

சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்காக இயேசு செயற்பட்டார் என்பதை இவர் வெளிப்படுத்துகின்றார். எனவே நாமும் ஒதுக்கப்பட்டவர்களுக்கு உதவுவோம். செபத்தின் மூலம் இறைவனை அனுபவிக்க அவர் எம்மை அழைக்கிறார்

**யோவான் நற்செய்தி**

ஆசிரியர் : திருத்தூதரான தூய யோவான்




அடையாளம் : கழுகு
மிக ஆழமான இறையியல் கருத்துகள் இந்நற்செய்தியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. வானத்தில் மிக உயரமாகப் பறக்கும் பறவை கழுகு ஆகும். அதனால் இவ் அடையாளம் வழங்கப்பட்டுள்ளது.

காலம் : கி.பி 90-100

இடம் : எபேசு

நோக்கம் : இயேசு இறைமகனாகிய மெசியா என்னும் நம்பிக்கையை ஏற்படுத்துவது

யோவானும் அவரது சகோதரன் யாக்கோபுவும் இயேசுவால் அழைக்கப்பட்ட முதல் சீடர்களில் அடங்குவர். மீனவர்களான இவர்கள் செபதேயு சலோமையின்

புதல்வர்கள் ஆவார். ஏனைய நற்செய்திகளை விட வேறு பாணியில் தமது நூலை முன்வைக்கும் யோவான் கிறிஸ்து இயேசு இறைமகன் எனவும், அவர் மீது நம்பிக்கை கொள்வதன் மூலம் நிலைவாழ்வை அடையலாம் எனவும் வலியுறுத்துகிறார். இயேசுவின் போதனைகள் வல்ல செயல்களைக் குறிப்பிடுவதை விட அவரது இறைத்தன்மையை வெளிப்படுத்த முயல்கிறார்.

எனவே நாமும் கிறிஸ்து இயேசு இறைமகன் என விசுவசித்து நிலை வாழ்வை பெற்றுக்கொள்ள முயலுவோம்.

நான்கு நற்செய்தி நூல்களிலும் உள்ளடங்கியுள்ள இயேசுவின் போதனைகளின்படி வாழ்வதன் மூலம் நாம் நிலைவாழ்வாகிய இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்ள முடியும். நற்செய்தி நூல்களைப் படிக்கும் நாம் அந்த நற்செய்தியால் இறையாட்சியை அடைவதுடன், எம் வாழ்வையே நற்செய்தியாக மாற்றி மற்றவர்களின் மகிழ்வுக்கும் அமைதிக்கும் ஆறுதல் அளிப்பதற்கும் இறையாட்சி பணியாளர் ஆவோம்.

**செயற்பாடு**

**பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

| நற்செய்தி நூல்கள் | அடையாளம் | காலம் | வேறுபெயர் | குறிக்கோள் |
|---|---|---|---|---|
| மாற்கு | | | | |
| மத்தேயு | | | | |
| லூக்கா | | | | |
| யோவான் | | | | |

**வாழ்க்கைக்கு**

✝ சவால்கள் மத்தியில் நம்பிக்கைக்கு சான்று பகர்வோம்.

✝ நற்செய்தியைக் கற்று வாழ்வாக்குவோம்.